Registered as a News Paper at the G. P. O., Sri Lanka Under No. QB/8965/78

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ. நா. ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |


ஐக்கியதீபம்

மலர் : 35 (புதிய தொடர்) பங்குனி, 1980 இதழ் 8

# தேசீய மட்டத்தில் ஒரு கூட்டுறவுக் கல்லூரி அமைக்க வேண்டும்

## கருத்துப் பரிவர்த்தனையில் முடிவு

**கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி தொடர்பாக சகல பயிற்சி வசதிகளும் அமைந்த தேசீய மட்டத்திலான ஒரு கூட்டுறவுக் கல்லூரி ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் கீழ கொழும்பில் அமைக்கப்பட வேண்டும்.**

குருநாகல், யாழ்ப்பாணம், காலி ஆகிய பகுதிகளில் பிராந்தியக் கூட்டுறவுக் கல்லூரிகள் இருத்தல் வேண்டும். இவற்றில் கூட்டுறவுப் பணியாளர் தொடர்பான அடிப்படைக் கல்வியுடன் விசேட பயிற்சிகளும் நடைபெறவேண்டும்.

இவ்வாறு இலங்கையில் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிமுறையைத் திருத்தியமைத்தல் தொடர்பாக இலங்கை விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற கருத்துப் பரிவர்த்தனையில் முடிவு எடுக்கப்பட்டது.

மாவட்டக் கல்வி நிலையங்களில் கூட்டுறவு அடிப்படைக் கல்வி நடைபெறுவதோடு அவற்றிலிருந்து விரிவுரையாளர்கள் பதவியுயர்வு அடிப்படையில் பிராந்திய தேசிய கூட்டுறவுக் கல்லூரிக்குச் செல்லும்படியான தரப்படுத்தப்பட்ட முறை ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும் அம்முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துப் பரிவர்த்தனையில் அகில உலக கூட்டுறவு இணைப்புச் சம்மேளனம் உணவு கூட்டுறவுத்துறை, கூட்டுறவு முகாமைச் சேவை நிலையம், தேசிய வர்த்தக நிருவாக நிலையம், தேசியகூட்டுறவுச் சபை, உச்ச மட்டக் கூட்டுறவு தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்,

குறித்த கருத்துப்பரிவர்த்தனை இலங்கைக் கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் பணிக் குழுவினால் ஆராய்ந்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை அடிப்படையாக வைத்து நடைபெற்றது.

கூட்டுறவுக் கல்வி பிரதானமாக தேசிய கூட்டுறவுச் சபையின் பொறுப்பாக இருத்தல் வேண்டும் அது கூட்டுறவுக் கல்வி தொடர்பான இணைப்புத் திட்டமிடல் முதலிய வேலைகளைச் செய்ய தேசிய கூட்டுறவுச் சபையின்கீழ் ஒரு தேசிய கூட்டுறவுக் கல்விக் குழு அமைக்கப்படல் வேண்டும். அதில் தேசிய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபை கூட்டுறவுத் திணைக்களம், கூட்டுறவு முகாமைச் சேவை நிலையம், பணியாளர் ஆணைக்குழு, உச்ச மட்டக் கூட்டுறவுத் தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் உயர் மட்ட முகாமைக் கூட்டுறவுப் பணியாளர் பிரதிநிதியும் இடம் பெற வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

மேலும் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

அங்கத்தவர் கல்வி, கூட்டுறவுப் பணியாளர் அடிப்படைக் கல்வி ஆகிய தேசிய கூட்டுறவுச் சபையின் பொறுப்புக்களாக இருத்தல் வேண்டும்.

ஏனைய பணியாளர்க்கான விசேட பயிற்சிகள் அளிக்கும் பொறுப்பு வசதிக்கு ஏற்ப தேசிய கூட்டுறவுச் சபை, முகாமைச் சேவைகள் நிலையம், கூட்டுறவு மத்திய கல்லூரி என்பனவற்றிடையே பங்கீடு செய்யப்பட வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தருக்கான பயிற்சி கூட்டுறவு மத்திய கல்லூரியின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

எல்லாப் ப.நோ.கூ. சங்கங்களிலும் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிப் பகுதி ஒன்று அமைந்திருத்தல் வேண்டும்;

கூட்டுறவுக் கல்வி தொடர்பாக ஒரு பங்களிப்பு அச்சங்கங்களின் பயிற்சித் தேவை முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு பாதீட்டு கொடுப்பனவாக அளிக்கப்படல் வேண்டும். இந்நிதி தேசிய கூட்டுறவுச் சபையால் நிருவகிக்கப்பட வேண்டும். கூட்டுறவு நிதியின் பொறுப்பும் தேசிய கூட்டுறவுச் சபையின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

அனுபவம் வாய்ந்த நிருவாக மட்ட கூட்டுறவுப் பணியாளருக்கும் கூட்டுறவாளருக்கும் பயிற்சியளித்து அவர்களைப் பயிற்றுவித்தல்; வேலையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,

தேசிய கூட்டுறவுச் சபையின்கீழ் கூட்டுறவுப் பயிற்சி பெறுவோர் தமது திறமையை வளர்க்கவும், பயன்படுத்தவும் கூடிய வகையில் ஆராய்ச்சிப் பகுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

## மாவட்டக்குழுவின் புதிய உறுப்பினர்கள்

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுவின் தலைவராக திரு. மு. ஆலாலசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு எம் சண்முகநாதன் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி குழுவின் வருடாந்தக் கூட்டத்தையடுத்து நடைபெற்ற மாவட்டக்குழுக் கூட்டத்தில் இத் தேர்தல் நடைபெற்றது,

மேற்படி குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய புதிய நிருவாகக் குழு வருமாறு: திருவாளர்கள் கே. துரைராசா, கே. வீரகத்திப்பிள்ளை, எஸ் சிவமகாராசா, வி, மாணிக்கம், சு. கந்தையா, கே. ஏ. தேவதிரவியம்;

## வருடாந்தக் கூட்டம்

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் வருடாந்தக் கூட்டம் மே மாதம் 24-ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது,

## உலக உணவுத் தினம்

ஆண்டு தோறும் ஒக்டோபர் 16ந் திகதி உலக உணவுத் தினமாக அனுட்டிக்கப்பட வேண்டுமென உணவு விவசாய நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு செய்வதன் மூலம் உலகை எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினை பற்றி மக்களிடையே விழிப்பை ஏற்படுத்துவதோடு பசி, பட்டினி வறுமை ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்திற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் பலப்படுத்தலாமென இந்நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கிராமப்புற மக்கள் தம்மைப்பாதிக்க வல்ல நடவடிக்கைகளில் கூடுதலாகப் பங்குபற்றுவதை ஊக்குவிக்க வேண்டுமென்றும் விவசாயம், கடற்றொழில், கிராமப்புற அபிவிருத்தி ஆகிய துறைகளில் வளர்முக நாடுகளுக்கிடையே தொழில் நுட்ப ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டுமென்றும் இந்நிறுவனம் தகவுரை செய்துள்ளது

உணவுற்பத்தி நிறுவனம் 1945ம் ஆண்டில் ஒக்டோபர் 16ந் திகதி நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு அபிவிருத்திக்கு கனேடிய உதவி

மூன்றும் உலகின் கூட்டுறவு அபிவிருத்திக்கு நீண்டகால உதவி வழங்க வேண்டுமென கனேடிய அனைத்துலக அபிவிருத்தி நிலையம் கோரப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோளை விடுத்தவர் கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த நெறியாளர் திரு புறூஸ் தோடாசன்.

அரசாங்கங்களின் தலையீடின்றி அடிநிலை மக்களுக்கு இத்தகைய உதவி சென்றடைய வேண்டுமென கனேடிய கூட்டுறவாளர்கள் விரும்புகின்றனர் என திரு. தோடாசன் வற்புறுத்தியுள்ளார்.

சென்ற ஆண்டு கனேடிய கூட்டுறவாளர் 34 ,000 டாலர் பெறுமதியான உதவியை ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க கரிபியன் நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கின.

# ஜனநாயக நிருவாகத்தின் சிறந்த தன்மை

P. E. வீரமன்

அனைத்துலகக் கூட்டுறவுக் கழக விதிகள் ஜனநாயக நிர்வாகக் கொள்கையைக் கீழ் வருமாறு விவரிக்கின்றன;

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக அமைப்புகள். அவற்றின் நடைமுறைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட வகையில் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்ட நபர்களால் நிர்வகிக்கப்படவேண்டும். ஆரம்பச் சங்கங்களின் உறுப்பினர்கள் வாக்களிப்பதில் சம உரிமையுடையவர்களாகவும், சங்கத்தின் நடைமுறைபற்றிய முடிவெடுப்பதில் சம பங்கு பெறுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்; வாக்களிப்பதில் சம உரிமை என்பது ஒருவருக்கு ஒரு வாக்கு எனப் பொருள்படும். ஆரம்பச் சங்கங்கள் தவிர மற்ற சங்கங்களின் நிர்வாகம் உரிய அமைப்பின்மூலம் ஜனநாயக முறையில் நடைபெற வேண்டும்;

ஜனநாயக நிர்வாகம் என்ற கொள்கை,

★ சங்கத்தை நடத்திச் செல்வதில் அக்கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பேரவை முழு அதிகாரமுடையது;

★ ஆரம்பச் சங்கத்தின் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டும் பெற்று வாக்களிப்பதில் சம உரிமையும் சங்கத்தின் நடைமுறை பற்றிய முடிவெடுப்பதில் சம பங்கும் உடையவர்களாகிறார்கள். ஓர் இணையத்தின் உறுப்பினர்கள் பிறிதொரு ஜனநாயக அடிப்படையில் வாக்குரிமை பெற்று இந்த உரிமைகளை அனுபவிக்கிறார்கள்.

★ உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் தெரிவித்த கருத்துக்கிணங்க ஒரு சங்கத்தின் செயல் முறைகள் நிர்வாகத்தினரால் செயல்படுத்தப்படுகின்றன.

★ நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் அல்லது உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட முறையில் நியமிக்கப்படுகிறார்கள்.

★ நிர்வாகம் உறுப்பினர்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்டது.

அதிகாரம்

ஒரு சங்கத்தின் முழு அதிகாரமும் அதன் உறுப்பினர்களடங்கிய பேரவையும் இருத்தல் வேண்டும். இவ்வாறு கூட்டுறவு, தனி நபரின் உயர் அதிகாரத்தை, தேவையின் பிறப்பிடத்தில் அதிகாரத்தைச் செலுத்தும் சக்தியை அமைத்து நிலைநாட்டுகிறது. அப்பொழுது தனி நபர் தனக்குத்தானே தலைவராக இருக்கிறார்' சங்கம் அவருடைய பணியாளாக உள்ளது. எனவே, உறுப்பினர்கள் சங்கத்தை முழு அளவில் கட்டுப்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். 24வது அனைத்துலகக் கூட்டுறவுக் கழக காங்கிரசில் திருவாளர்கள் கெரினெக் (பிரான்சு) (Kerinec) என்பவரும், தேடின் (சுவீடன்) (Thedin) என்பவரும், அவர்களது கூட்டறிக்கையில்

இக்கருத்து பெல்ஜியத்தைச் சேர்ந்த பேராசிரியர் லேம்பர்ட்டின் (Lambert) 'பெரும்பான்மை நடைமுறைக் கூட்டுறவாளர்களும் கூட்டுறவுத் தத்துவ அறிஞர்களும் ஜனநாயகம் கூட்டுறவின சாராம்சம் என்ற கருத்தை வலியுறுத்திப் பல ஆண்டுகள் ஆகிவிடவில்லை. இங்கு நாம் மிகவும் வரவேற்கத்தக்க ஒரு மாறுதலைக் காண்கிறோம். ஜனநாயகம் என்பது நம்மை வேறு எந்த பொருளாதார மற்றும் சமுதாய முறையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் கொள்கை என்பது தெளிவாகிறது. அதே சமயத்தில் இக்கொள்கை எதிர்காலத்திற்கு மிகவும் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது'

யிடம் உள்ளது' பொதுவான செயல்முறையின் நோக்கம் உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும்; யாருடைய தேவைகள் பொது அமைப்பைத் தோற்றுவித்தனவோ அவர்களிடமே பொதுவான செயல்முறையின் பிறப்பிடமும் அதிகாரத்தைச் செயல்படுத்தும் சக்தி

ஜனநாயகம் கூட்டுறவின் சாராம்சம் எனக் கூறியுள்ளனர் இக்கருத்து சோவியத் நாட்டைச் சேர்ந்த கிளிமோவ் (Klimov) என்பவரது 'இச்சாராம்சம் நிலைபெறவில்லையெனில் கூட்டுறவு இறந்து படுகிறது அல்லது தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிடுகிறது' என்ற கூற்றில் எதிரொலிக்கிறது.

என்ற கூற்றுகள் மேற்காட்டிய கருத்தை மீண்டும் எதிரொலிக்கின்றன.

ஒளி விளக்கு

திருவாளர்கள் கெரினெகும் தேடினும் கூறியது போல கூட்டுறவு குறிப்பிட்ட பொருளாதார இலக்கையடையும் ஒரு வழிமட்டுமல்ல ஒரு பொருளாதார அமைப்பு முறை மட்டுமல்ல தினசரி வாழ்க்கையில் வேரூன்றிய ஒரு ஜனநாயக அமைப்பு மட்டுமல்ல—அது எதிர்காலத்தின் ஓர் ஒளிவிளக்காகும். நாம் இதைக் குறிப்பிடுவதின் காரணம் இந்த எதிர்கால ஒளிவிளக்கு கூட்டுறவு ஜனநாயகத்தின் வலிமையோடு பின்னிப் பிணைந்திருப்பதேயாகும்.

கூட்டுறவு ஜனநாயக முறைகள் ஒரே இயல்பானவை. அவை ஒரே இயல்பானவை — ஆனால் முழுமையாக அல்ல; பொது அமைப்பு ஏற்றுள்ள செயல் அல்லது செயல்களுக்கேற்ப அமைவது. பொது அமைப்பின் நோக்கங்களுக்கும் அது பூர்த்தி செய்யவேண்டிய உறுப்பினர்களின் பொதுத் தேவைகளுக்கும் இடையே ஒரு நேரடித் தொடர்பு உள்ளது. உறுப்பினர்களிடையே வேறுபாடுகள் இருக்கலாம்; ஆனல் அவை நோக்கங்களை அடைவதற்குரிய வழிகளைத் தேடும்போது மட்டுமே தோன்றுகின்றன. இவ்வாறு கூட்டுறவு ஜனநாயகம், அரசியல் ஜனநாயகத்திலிருந்து மாறுபட்டதாகும்.

வலிமை

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் ஜனநாயக நிருவாகம், அதன் உரிமையை அனுபவிப்பவர்கள் மேலே கூறியபடி தனித்தனியே சுதந்திரமாக இருந்தால் மட்டுமே வலிவுடையதாகும். இல்லையெனில் உண்மையான நிர்வாகம் சங்கத்துடனுன சமுதாயப் பொருளாதாரத் தொடர்புபற்றி உறுப்பினர்கள்மீது கட்டுப்பாடு செலுத்துபவர்களின் கைக்குச் சென்றுவிடும்; ஜனநாயக நிர்வாகம் என்ற கொள்கையை இது சீர்குலைத்து விடும். உறுப்பினர்களே அவர்களுக்கு ய ஈடுபாடு என்ன என்பதை அறிவர். இதன் அடிப்படையிலேயே ஜனநாயக நிர்வாகம் அமைகிறது. எனவே, கட்டாயமற்ற கொள்கையில் அடங்கிய தனிநபர் சுதந்திரம் என்ற கொள்கை ஜனநாயக நிர்வாகம் என்ற கொள்கையின் விளைவாகும்.

கூட்டுறவுகள் கட்டாயமற்ற முறையில் தனிநபர்கள் சேர்ந்த அமைப்புகள்; பொதுவான பொருளாதார பிரச்சினைகளைச் சமத்துவ அடிப்படையில் தீர்க்க வழி காண்பன; முழுச் சமுதாய நலனுக்கும் ஒழுங்கான முறையில் சேவையை அளிப்பன; உறுப்பினர்கள் செயல்படுத்தும் ஜனநாயக நிர்வாகம், சங்கம் தீர்க்க முயலும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளை உடையவர்களின் எண்ணத்தை எந்த அளவிற்குப் பிரதிபலிக்கிறதோ அந்த அளவிற்கே வலுவானதாகவும் வெளியாரால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயும் இருக்கும். சங்கத்தில் இத்தகையவர்கள் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறார்களோ அந்த அளவிற்கே சங்கத்தின் பேரவை முடிவுகட்கு பொது மக்களின் ஆதரவு இருக்கும்; எனவே அனைவரும் உறுப்பினராதல் என்ற கொள்கை கட்டாயமற்ற அமைப்பு என்ற கொள்கையின் விளைவுமாகும்.

உறுப்பினர் நலன்

ஜனநாயகம் கூட்டுறவின் சாராம்சமாகும்; ஏனெனில் கூட்டுறவு, ஜனநாயக நிர்வாகம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்காவிடில் அதன் நோக்கத்தில் நோல்வியுறும். அனைத்துலகக் கூட்டுறவுக் கழகக் கொள்கைக் குழு கூறுகிறபடி ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படையானதும் முக்கியமானதுமான நோக்கம் உறுப்பினர்களின் நலனை மேம்படுத்துவதாகும். உறுப்பினர்களின் நலன் என்ன என்பது உறுப்பினர்களாலேயே சிறந்த முறையில் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு கூட்டுறவுச் சங்கம் அதன் அடிப்படையிலும் முக்கியமானதுமான நோக்கமாகிய உறுப்பினர்களின் நலனை மேம்படுத்துவது என்ற கொள்கையைப் பூர்த்தி செய்ய வேண்டுமானுல் அது உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்கச் செயல்பட வேண்டும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்களும் கூட்டுறவுக் கொள்கைகளும்

போல்டெறிக்

ஏகபோகம் பற்றியும் பல்தேச வணிக கூட்டுத் தாபனங்களின் வளர்ச்சி பற்றியும் பல ஆண்டுகளாக அனைத்துலக கூட்டுறவு இயக்கம் அதிக அக்கறை செலுத்தி வந்துள்ளது. உலக நாடுகள் சபை 1973ல் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் (உலக அபிவிருத்தியில் பல்தேச வணிக கூட்டுத்தாபனம்) 1971ல் ஏறக்குறைய 7300 பல்தேச வணிகக் கூட்டு நிறுவனங்கள் உள்ளன எனக் கணிப்பிட்டது. இவற்றில் மிகப் பெரிய 650 கூட்டுத்தாபனங்களின் மொத்த விற்பனை டாலர் 773,007 மில்லியன் என அவ்வறிக்கை குறிப்பிட்டது. இதைத்தவிர 211 கூட்டுத் தாபனங்கள் ஒவ்வொன்றினதும் வருடாந்த விற்பனவு 1000 மில்லியன் டாலருக்கு மேற்பட்டது என்றும் அவ்வறிக்கை சுட்டியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இக் கூட்டுத் தாபனங்கள் அளவிலும் செல்வத்திலும், வல்லமையிலும் மிக வேகமாகவும் பிரமிக்கத் தக்க முறையிலும் வளர்ந்த வரலாற்றினையும் அவ்வறிக்கை எடுத்துரைத்தது.

பெரிய கூட்டுத்தாபனங்களுக்கும், அவற்றின் துணை நிறுவனங்களுக்குமிடையே நடைபெறும் வணிகம் தொழில் மயமான நாடுகளினதும் வளர்முக நாடுகளினதும் ஏற்றுமதி இறக்குமதி சமநிலையைப் பாதிக்கின்றது. அத்துடன் தேச எல்லைகளைத் தாண்டித் தமது நிதிகளை இக் கூட்டுத்தாபனங்கள் மாற்றக்கூடிய நிலையில் இருப்பதால் தாம் செலுத்தவேண்டிய வருமான வரியையும் அவை குறைக்கவல்லன! கம்பெனிகளுக்கு இடையில் நடைபெறும் வணிகத்திலே விலைகளை இவை கட்டுப்படுத்துவதால் இது சாத்தியமாகின்றது; இதனை 'மாற்று விலை குறிப்பு' என்பார்கள்.

பெரும் கூட்டுத்தாபனங்கள் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளால் இவற்றுடன் போட்டியிடும் சிறு கம்பெனிகளும், கூட்டுறவு நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும், சர்வதேச வணிக நிறுவனங்களும், பாவனையாளர் நிறுவனங்களும், சூழலைப் பேணுவதில் அக்கறை கொள்வோரும், வளர்ச்சியுற்ற நாடுகளினதும் வளர்முக நாடுகளினது அரசாங்கங்களும், உலக நாடுகள் சபையைச்சார்ந்த நிறுவனங்களும், பொது மக்களும் பெருவ கவலையுற்றிருப்பது வியப்பன்று. இதனுல் பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்களின் வளர்ச்சி பற்றி அவர்கள் அக்கறை கொண்டிருப்பது இயல்பே.

(வளரும்)

(முற்றொடர்)

# கூட்டுறவு முயற்சிகளில்
# முகாமை அபிவிருத்தி

கூட்டுறவுத் தத்துவத்திலும், கருத்திலிருந்தும் இரு அடிப்படைக் கோட்பாடுகள் தோன்றுகின்றனஎனலாம். இவ்விரண்டும்கூட்டுவின் பல்வேறு எண்ணங்களோடும் சேர்ந்தமைந்திருக்கின்றன. ஒன்று சேவை அடிப்படைக் கோட்பாடு. தனிப்பட்டவரின் தேவைகளுக்கான சேவைகளை வழங்குவதற்காகவே நிறுவனங்கள் இருக்கின்றன என்று இது கூறுகின்றது. தேவைகளைக் குறிப்பிட்டு, அத் தேவைகளைத் தெளிவான சேவைகளாக மாற்றுவதற்கு ஜனநாயக முறையில் பங்குபற்றும் அமைப்புகள் தாம் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் நிறுவனங்களில் இருக்கின்றன. எனவேதான், நெடுங்காலமாக பெரும்பான்மை தனிப்பட்டோர்களின் தேவைகளுக்கான சேவைகளைச் செய்து வந்த இப்படிப்பட்ட நிறுவனங்களில்தான் நல்ல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மூலதனத்தின் நியாயமான கூலி செலுத்தப்பட்டபின் மற்றவர்களிடம் எடுக்கப்பட்ட மீதமே இலாபமாகும் என இவ்வடிப்படைக் கோட்பாட்டு அல்லது நம்பிக்கை முறை எண்ணுகிறது. எனவே நிறுவனத்தின் எந்த இலாபமோ அல்லது மீதமோ பணமாகவோ அல்லது சேவையாகவோ அவை எங்கிருந்து வந்ததோ அங்கு திருப்பிக் கொடுக்கப்படும். மக்கள் தமக்குத் தாமே உதவி செய்யும் நம்பிக்கைமுறை என்பது, ஒரு நிறுவனத்திற்கு வளர்ச்சி அவ்வளவு முக்கியமான அம்சம் அல்ல என்பதுதான் மற்றும் குழுக்களுக்கான உதவியே மிகவும் முக்கியமானதாகும் மக்களுக்கு ஒரு நிறுவனம் வழங்கும் சேவைகளின்படியே தீர்மானங்களின் தரத்தை அறிய முடியும் எனறே பல்வேறு கூட்டுறவு கற்பனு சாத்திரம் கூறுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் தான் முடிவு என்பதல்ல; ஆனல் அவை அந்த முடிவுக்கான வழியேயாகும். இவை அங்கத்தவர்களுக்குச் சேவை செய்வதற்காகவே இருக்கின்றன மற்ற அடிப்படைக் கோட்பாடு, அதுவும் கூட்டுறவில் தொக்கி நிற்பது என்னவென்ருல் கூட்டுறவு முயற்சிகளில்ஈடுபடுவதேயாகும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே நிறுவனங்கள் இருப்பதால், இதில் பங்குபற்றி அவற்றில் சம்பாஷித்து அதன் மூலம் தமது குறிப்பிட்ட தேவைகளை முயற்சியாக்க முடியும். எனவேதான், பங்குபற்று முறை அதன் முடிவுவரை தொடரப்படுமானுல் அந்தக் கூட்டத்தின் மிகவும் சிறந்த தீர்மானம் அந்த நேரத்தில் பங்குபற்றுவதின் மூலம் எழுவதாகும். இப்படியான சந்தர்ப்பத்தில் கடைசி முடிவுகளிலும் பார்க்க, கூட்டுறவு முறை எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்பதே அதி முக்கியமாகும். இங்ஙனமான சூழ்நிலையில், தனிப்பட்டோர், கூட்டுறவு முறை மூலம் வாழ்க்கையின் உண்மையான காரணத்தை அறிவதோடு, தமது நம்பிக்கை முறைகளும் பூர்த்தியாவதைக் காணுகின்றனர். விளக்கமான கூட்டுறவு சமுதாயங்களிடையே இதுவே முக்கிய கோட்பாடாக இருக்கின்றது.

அரசாங்க முயற்சிகள் சிலவேளைகளில் சேவை அடிப்படைக் கோட்பாட்டைப் பயன்படுத்தக் கூடும். ஒரு குறிப்பிட்ட கட்சியை அதிகாரத்தில் வைத்திருப்பதற்காகவும் ஒரு கோட்பாட்டைத் தொடரக்கூடும். சில அரச முயற்சிகள் (கனடா அபிவிருத்திக்கூட்டுத்தாபனம்) இலாபத்தையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது அவர்களின் குறிக்கோள்களிலேயே விளக்கமாயிருக்கின்றது. அரசாங்கமும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் வருமதியைப் பார்த்து இதை மதிப்பீடு செய்வதுடன், வளர்ச்சியையும் இது வலுப்படுத்துகிறது.

ஆனல், சேவைக் கூட்டறவுகளில், இக் கோட்பாடு மிகவும் தெளிவாய்க் காட்டப் பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் சங்கத்தார்களுக்குச் சேவை செய்வதையே முக்கியமாகக் கொண்டுள்ளதோடு, அவர்களை யகொடு கல்வாங்கல்களில் அதிக லாபத்தை கருதுவதில்லை. எனவேதான், சேவை அடிப்படைக் கோட்பாடு இலாப அடிப்படைக் கோட்பாட்டிலும் பார்க்க மிகவும் தெளிவற்றதாயிருக்கின்றது. எனவேதான் ஊழியர்களும், கனிஷ்ட முகாமையாளர்களும் இதைப்புரிந்து நடந்துகொள்ளக் கஷ்டப்படுகின்றனர்.

### முகாமைத் தீர்மானம் எடுக்கும் முறை

தனது குறிக்கோள்களை எய்துவதற்கான அதிகார அடிப்படையை அபிவிருத்திசெய்வதே ஒரு நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கூட்டுறவுகளை எடுத்துக் கொண்டால், இவ்வதிகாரத்திலின்றும் அங்கத்தவர்களுக்குப் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதேயாகும். அங்கத்துவப் பிரதிநிதிகள், தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைப் பணிப்பாளர் சபைக்கு அளிக்க, அவர்கள் அன்ருட அதிகாரத்தை முகாமையாளருக்கு அளிக்கின்றனர். இவரே நடு மையத்தில் இருக்கின்ருர். முகாமை அதிகாரம் இவரைச் சுற்றி வருகிறது.

இபபொழுது நாம், அதிகாரத்தின் அடிப்படை அம்சங்களை ஆராய்வோமாக, நான்கு விதமான அதிகாரங்கள் வழக்கிலுண்டு.

(1) அதிகாரமும் தொடர்புடையதாகும். அதிகாரம் என்பது ஒருவருக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல, மற்றும் நபர்களிலும் குழுக்களையும் பார்க்க ஒருவா வலிமையுள்ளவராயிருக்கலாம். ஒருவிதமான நிலையில் ஒருவர் அதிகாரமுடையவராயிருக்கலாம். ஆனல், வேறு ஒரு சூழ்நிலையில் அவருக்கு அதிகாரமில்லாமலிருக்கலாம்.

(2) வேண்டுமென்று செய்யப்படுவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமாயிருக்கலாம், தெரியாத காரணங்கள் இருக்கலாம்; ஆனல், அதிகாரமும், அதன் பிரயோகமும் தற்செயலானதல்ல.

(3) அதிகாரம் விதித்தலாகும்--அதாவது அதிகாரத்தை உடைய ஒருவர் அதை மீறுபவர்களைத் தண்டிக்கக் கூடியதாகவும், உத்தேசிக்கப்பட்ட குறிக்கோள்களை அடையக் கூடியதாயுமிருக்க வேண்டும்.

(4) எதிர்கால முயற்சிகளுக்கு அதிகாரம் மறைந்துள்ள சக்தியாகும். இது பல்வேறு வளங்களிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவை மக்களின் தொடர்புகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும்; நிறுவன வளங்களின் கட்டுப்பாடுகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றது. பிரேஞ்சும், றேவனும் (1960: 607–623) அதிகாரத்தின் பல்வேறு வளங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர்; அவை ருவருக்குப் பரிசு கொடுக்கும் ஆற்றலுக்கான அதிகாரம், பலவந்தப்படுத்தப்பட்ட அடிப்படையில், மற்றும் ஆட்களுடன் தம்மை ஒன்று சோக்கச்கூடிய அதிகாரம், சட்டபூர்வமாக இயற்றப்பட்ட அதிகாரம். நுட்பத் திறலினுல் ஏற்பட்ட அதிகாரம் ஆகியன இதில் உள்ளடங்கியுள்ளது,

முகாமை அணையத்திற்கான அதிகாரத்தின் மிகவும் முக்கிய அம்சம் என்னவென்ருல் அதிகாரத்திற்ந எதிர்மாருக ஒருவர் மீது தங்கியிருத்தலாகும் முகாமையாளர் மீது எவ்வளவுக்கு மற்றவர்கள் தங்கியிருக்கின்றனரோ அவ்வளவுக்கு முகாமையாளரும் வலிமையுள்ளவராவர்; ஆனல் ...சார்ந்திருப்பதையும் மற்றவர்கள் வெறுக்கக்கூடும் தங்கியிருப்போர்கள், தங்கியிருத்தலைக் குறைப்பதற்கு பல வழிகளைப் பார்ப்பார்கள். கூட்டுறவிலுள்ள பொது முகாமையாளர் சம்பிரதாயப்படியான நிறுவனத்தின் ஜட, நிதி/வளங்கல்கள் மூலம், தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும். ஊழியர்களைச் சேர்த்தலும் நீக்கலும்; கூட்டுறவு பணிப்பாளர்கள் அங்கத்தவர்களின் பொறுப்புடனும், ஆனல் அதிகாரம் பிரயோகிக்கப்படும் முறையை, குழுக்கள் அங்கீகரிக்காவிட்டால், கூட்டுறவைப் பயன்படுத்தாது, அவற்றில் அங்கத்தவர்கள் தங்கியிருத்தலைக் குறைத்தல்; ஊழியர்களும, நிபுணர்களும் விட்டுச் செல்லக் கூடும் அல்லது வேண்டுமென்றே நிறுவனத்தை ரகசியமாகக் கவிழ்க்கக் கூடும். பணிப்பாளர்களும் அவரை நீக்கக்கூடும். சேவைகளை வழங்குவதற்காகவே கூட்டுறவு நிறுவனங்கள், அதிகாரத்தைச் சேர்க்கின்றன. ஆனல், கூட்டுறவு நிறுவனத்துள், சமத்துவமும, நேர்மையும் நிலவ வேண்டும் அதிகாரம், தங்கியிருத்தல் தொடர்பில், தனிப்பட்டோரும், குழுக்களும் மாறுபடக் கூடும்.

ஆனல், இந்த அதிகாரம் உறுதியாக நிலைக்க வேண்டுமானல், பலவந்தப் படுத்தப்படடதாயிராமல், சம்பாதிக்கப்பட்டதாயிருக்கவேண்டும். (அதாவது தன்னியல்பாகக் கிடைத்திருக்க வேண்டும்)

ஒரு கூட்டுறவின் முகாமையாளர் அதிகாரம் கொண்டவராயிருக்கிருர். அதிகாரம் எவ்வாறு முகாமைப் படுத்தப்பட்டது என்பது அது பிரயோகிக்கப்பட்ட முறையில் தங்கியுள்ளது: அதாவது எல்லோருடைய முயற்சிகளையும் ஒன்று கூட்டி, நிறுவனத்தின் குறிக்கோள்களைப்பூர்த்திசெய்வதாகும் அட்டவணையில் விளங்கப்படுத்தியபடி கூட்டுறவு முகாமையாளர்கள் மற்றும் முயற்சிகளைப் போலல்லாது இதில் அதிகமான குழுக்களை தீர்மானம் எடுப்பதில் ஈடுபடுத்த வேண்டும்

நிறுவன அதிகாரத்தில் ஒரு விநோதமான அம்சம் என்னவென்ருல், அதிகாரம் அதிகமாகப் பங்கிடப்படும்போது, அது மாறுபடச்செய்வது குறைவாகவும், மற்றும் நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நிறுவனத்தின் அதிகாரம் கூடுதலாயுமிருக்கிறது. சுருக்கமாகக் கூறின் அதிகாரம் என்பது பிரிக்கப்படக்கூடிய குறிப்பிட்ட அளவு அன்று அது எவ்வளவுக்கு அதிகமாக பிரிக்கப்படுகிறதோ அவ்வளவுக் கதிகமாக அளவாயிருக்கிறது. எனவே, பல்வேறு நிறுவனப் பிரிவுகளையும் இணைக்கும் ஒரு முகாமையாளர் நீண்ட காலத்தில் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய நிறுவனத்தின் அதிகாரத்தை அதிகமாக்குவார்.

ஒரு நிறுவனத்தின் ஒன்றிணைப்பு பல்வேறு வழிகளில் செய்யப்படலாம். எழுதப்பட்ட விதிகளின் மூலம் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக முறைதான் சாதாரணம். ஆனல் ஒரு நிறுவனத்தைச்சிறப்பு முறையில் கொண்டுவர இதுமாத்திரம் போதுமானதல்ல, ஒரு வேலையைச் சிறிது சிறிதாகப் பிரிப்பதால், கீழ் வேலை செய்வோரைத் தூர விலகச் செய்வது போலிருக்கும், இரண்டாவதாக இப்படிப்பட்ட கட்டுப்பாடு. அவசியமான வேலைகளுடன் சம்பந்தப்பட்டதாகும். மேலும், இவ்வேலைகள் ஒன்றிலே ஒன்று தங்கியுள்ளதாயும், இவற்றை இணைப்பதும் அவசியமாகும், கூட்டுறவுத்தத்துவத்துடன் கொள்கைப் பற்றுள்ளதும், கொந்தளிப்பான சூழ்நிலைக்குப் பொருத்தமான அதிகார இனத்திற்ஜரிய அமைப்புக்குப் பல்வேறு மாற்று முறைகள் இருக்கின்றன. இதிலொன்றுதான் உருவமையூட்டும் நிறுவன வகையாகும்,

இதில் குறிப்பிடத்தக்கதென்னவென்ருல். கூட்டுறவு முகாமையானது பல்வேறு மக்களால், பல்வேறு தரத்தில் தீர்மானங்களை எடுப்பதாகும். இம்முறை முகாமைப்படுத்தப்பட வேண்டும். ஆனல், இது செல்வாக்கைப் பயன்படுத்திக் காரியம் சாதித்துக் கொள்ளல் அல்ல. வேலைச் சிறப்பைக் குறைக்காது அதிக மக்களைப் பங்குபற்றச் செய்து, அமைப்புகளையும், தொழில் முறையையும் அபிவிருத்தி செய்தலாகும் பல கூட்டுறவுகள், ஒரே நேரத்தில் சிறப்பாகவும், திறமையுள்ளதாகவும் இருக்க, பல முறைகளை அபிவிருத்தி செய்துள்ளன. இதற்கு முயற்சியும் சிறந்த முகாமையும் அவசியமாகும்.

### தகவல்களுக்கான முகாமை

அட்டவணையில் குறிப்பிட்டபடி பல நிறுவனங்களுக்கு அதிகமான தகவல்கள் அவசியமாகும். ஆனல், கூட்டுறவுகளில் இது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகிறது கூட்டுறவுகளிடையே தகவல்கள் இருப்பது மிகவும் முக்கியமாகும். ஏனெனில், தீர்மானங்களை எடுப்பதற்கு அங்கத்துவ, தொழிலாளர் பங்குபற்றல் மிகவும் முக்கியமாகும் ஸ்டீல் என்பவர் (1975) தகவல்கள் சரியாக வெளிப்படுத்தப்படாமையின் பிரச்சினைகள் பற்றிப் பேசினர். நிறுவனத்துள் பல்வே முறைமைகள், தக

(தொடர்ச்சி 6-ம் பக்கம்

# ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க அமைப்புக்களை உருவாக்கல்

ஹான்ஸ் H. முன்கினர்

(முற்றொடர்)

கைத்தொழில் மயமான நாடுகளிலே ஆரம்பமட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் தேசிய அமைத்துவக மட்டங்களிலும் ஒருங்கிணைப்பைத் துரிதப்படுத்தியுள்ள காரணிகள் வருமாறு:

(1 பொருளாதார அமைப்பிலே வீண் விரயத் தடுப்பும் ஒருமுகப்படுத்தலும் பொதுப் போக்குகளாக நிலவுதல்.

(2) தனிப்பட்ட வணிக நிறுவனங்களுடன் கூட்டுறவு அமைப்புக்கள் கடுமையாகப் போட்டியிடல்

(3) நவீன தொழில்நுட்பத்தின் வேக வளர்ச்சி: இதற்கு தொழில்நுட்ப அறிவு பெற்ற பணியாளர் உள்ளூர் மட்டத்திலும் கூட தேவைப்படுகின்றது. இதன் விளைவாக இத்தகைய அறிவு பெறுதவர்கள் கூட்டுறவு நிருவாகக் குழுக்களில் இடம் பெறுவதைப் பெரும்பாலும் தவிர்க்க வேண்டி ஏற்படுகிறது.

(4) நவீன தொழிற் சாதனங்களைக் கொள்வனவு செய்வதில் கணிசமான மூலதனத்தை முதலீடு செய்ய வேண்டிய தேவை; கடன் பெறப்பட்ட பெரும் முதலோடு தொழிற்பட வேண்டிய நிர்ப்பந்தம். இவற்றை ஈடுசெய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் தமது வளங்களை ஒன்று திரட்டினால்தான் வங்கிகளோடு பேரம்பேசக்கூடிய நிலையை எய்த முடியும், கூட்டக் கடன் உத்தரவாதம் செய்து கொள்ள முடியும்.

இத்தகைய போக்குகளின் வளர்ச்சியால் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது இன்றியமையாததாகின்றது. உள்ளூர் மட்டத்தில் தனிப்பட்ட நிறுவனங்கள் இத்தகைய பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாது; எனவே சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் இச்சங்கங்கள் ஒன்றிணைய வேண்டியிருக்கிறது அல்லது மடியநேரும்.

அதிகம் வளர்ச்சியுறுத நாடுகளிலே ஒருங்கிணைந்த கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்குவதற்கு பெரும்பாலும் மேலிருந்தே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுறவுத் துறையிலே எதிர்கொள்ளப்படும் பின்வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே அவ்வாறு செய்யப்படுகின்றன:

(1) ஆரம்பச் சங்கங்களின் உறுப்பினர்களிடையேயும் பதவி வகிப்போர்களிடையேயும் அதிக கல்வி அறிவோ, தொழில் பயிற்சியோ இல்லாமை.

(2) உற்பத்தியைப் பெருக்குவதற்கு அடிமட்டத்தில் கூட நவீன தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை

(3) தொலை தூரத்தில் அமைந்துள்ள சந்தைகளில் காசுப் பயிர்களைச் சந்தைப்படுத்துதல்; இவற்றின் விலைகள் பாரதூரமாக ஏறி இறங்குதல்.

(4) கடன் பெறப்பட்ட மூலதனத்தோடு தொழில்படுவது பரிச்சயமில்லாத ஆட்களுக்கு உற்பத்தி நோக்கங்களுக்காகக் கடன்களை வழங்குதலும், மேற்பார்வை செய்தலும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்குவதால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் தெட்டத் தெளிவானது. எனினும், சில பிரச்சினைகளைக் கோடிட வேண்டியியிருக்கிறது.

திட்டமிடல் முடிவெடுத்தல் ஆகிய அதிகாரங்கள் மேல் மட்ட அலகுகளிடம் ஒப்படைக்கப்படும் போது உறுப்பினர்களுக்கும் முடிவெடுப்பதற்குமிடையேயுள்ள இடைவெளி மேலும் விரிவடைகின்றது. உள்ளூர் மட்ட அலகுகள் வெறுமனே உயர்மட்ட அலகுகளின் நிறைவேற்றுக் கருவிகளாக மாறக்கூடிய ஆபத்து இருக்கின்றது. இதன் விளைவாக உறுப்பினர்களின் ஆதரவு குன்றுவதோடு அவர்கள் சுறுசுறுப்பாகப் பங்குபற்ருமலும் விடலாம். தனைமை தாங்கும் அலகுகளில் மிதமிஞ்சிய அதிகாரம் குவிக்கப்பட்டால் போதிய பாதுகாப்புக்களோ சமன்படுத்தல்களோ அற்ற நுட்பமான மேல் கட்டுமானம் உருவாகக் கூடும்.

கூட்டுறவுச் சங்கங்களின் உள்ளியல்பான பலவீனங்களில் ஒன்று அவற்றின் இரட்டைத்தன்மையே: ஒரு சிறிய குழுவாக இருக்கும்போதே கூட்டுறவு அமைப்பு பயன்மிக்கதாய் விளங்குகின்றது; ஒரு குறிப்பிட்ட கீழ்; எல்லையளவிற்கு மேற்பட்டதாக இருக்கும் போதுதான் கூட்டுறவு முயற்சி செயற்திறன் மிக்கதாகின்றது: இப்பலவீனத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்குதல் ஒரு வழி வகையாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே இயங்கி வருமிடத்து அவற்றை ஒருங்கிணைத்து மறுசீரமைப்பதென்பது அவ்வளவு எளிதல்ல. இதனைச் செய்வதென்றால் பல கட்டங்களில் மேற்கொள்ளவேண்டுமென அனுபவவாயிலாக அறியக்கிடக்கின்றது:

(1) ஒத்த உபவிதிகளை நிறைவேற்றுதல், ஒத்த அளவிலான அலகுகளை இணைத்தல், ஒத்தவகையான மட்டுப்படுத்தலைப் புகுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் ஒத்திசைவுக் சட்டம் அல்லது கட்டங்களை தொடங்குதல்.

(2) பொருளாதாரத் துறையைச் சாராத பணிகளை இணைத்தல் (கல்வி, பயிற்சி, கணக்குப் பரிசோதனை மேற்பார்வை)

(3) பொருளாதாரப் பணிகளை இணைத்தல்.

ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டுச் செய்வதென்றால், ஒருங்கிணைந்த கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்குதல் எளிதாகின்றது. எடுத்துக் காட்டாக சுவீடிஸ் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள்;

(வளரும்)

---

(முற்றொடர்)

# கூட்டுறவுக் கல்வி: அதன் நோக்கமும் உள்ளடக்கமும்

R. P. P. இராஜபக்ஷ
பிரதி கூட்டுறவு ஆக்க ஆணையாளர்

கூட்டுறவுக் கல்வியைப் பற்றிக் குறிப்பிடும்போது கூட்டுறவுச் சங்கங்களோடு நாளாந்தம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள கூட்டுத்தாபன அதிகாரிகள் பற்றி கூறுதிருக்க முடியாது. ஒருவகையில் இவர்கள் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் தலைவிதியை நிர்ணயிக்கின்றனர் எனலாம். பல்வேறு காரணங்களால் இந்நாட்டு அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கங்களை பகைமை உணர்வோடும் ஏளனத்தோடும் நோக்குகின்றனர். இதற்கு ஒரு காரணம் சங்கங்கள் பலவற்றிடையே நிலவும் திறமையின்மையும் ஊழலுமே. ஆனால் அதிகாரிகளின் இத்தகைய கண்ணோட்டம் விஷச் சுழலாகி சங்கங்களை மேலும் தாழ்த்துகின்றன. உயர் மட்ட இடைமட்ட அதிகாரிகள் சங்கங்களை தனியார் துறை அரசு துறைநிறுவனங்களோடு பாதகமான முறையில் ஒப்பிடுகின்றனர். இந்த நிறுவனங்களின் குறிக்கோள்களும் செயல்முறைகளும் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களிலிருந்து முற்றிலும் வேறுபடுபவை வரலாற்றுப் பின்னணியின் விளைவாகவும் பொருளாதார நிலைமைகளின் காரணமாகவும் அரசு துறையால் ஈர்க்கப்படவல்ல பணியாளரை கூட்டுறவுத் துறை கவரத்தவறுகின்றது

இதனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய மனப்படிமம் சோபையிழந்திருக்கிறது அரசாங்க அதிகாரிகளினது குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களோடு தொடர்புள்ள திணைக்களங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும், அதிகாரிகளினது மனப்பாங்கினை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாததாகும். இதற்கான திட்டத்தில் பொருத்தமான மட்டங்களில் மகாநாடுகளும், கருத்தரங்குகளும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவற்றினூடாகக் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்கள் செயல்முறைகள் பற்றியும் இயக்கம் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றியும் தெளிவுபடுத்தலாம்.

இறுதியாக இப்பொழுது பதவியிலுள்ள நெறியாளர் குழுக்கள் தாம் அறக்காவலர் அல்லது தர்மகர்த்தாக்கள் என்பதை நன்குணர்ந்து சங்கங்கள் முழுக்க முழுக்க குடியாட்சிப் பாங்கான முறையிலே நிர்வகிக்கப்படுவதற்கு வழிகோலுவது தமது பொறுப்பு என்பதையும் உணர்ந்து செயலாற்ற வேண்டும். பதவியிலுள்ளவர்கள் தமது ஆட்சியை நீடித்து நிலைகொள்ளச் செய்ய விரும்புவதுஇயல்பே; இப்போக்கிற்கு ஏற்ப இப்பொழுது நியமனம் பெற்றுள்ள நெறியாளர்களும் தாம் தொடர்ந்து பதவியிலிருப்பது நாட்டின் நன்மைக்கு இன்றியமையாதது என்று கருதக்கூடும். இவ்வாறு அவர்கள் எண்ணினால் சங்கங்களை நன்ருக நடாத்தி நெறியாளர் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பைத் தமக்குத் தாமே அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதை அவர்களுக்கு இடித்துரைக்க வேண்டும்.

வீறுமிக்க செயற்திறமை வாய்ந்த சுதந்திரமான கூட்டுறவு இயக்கத்தினைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இக்குறிக்கோளை எய்துவதற்கு உதவும் பொருட்டு எமது கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

(முற்றும்)

# கூட்டுறவு இயக்கத்தின் தனிப்பண்பு

பேராசிரியர் ஜோர்ஜ் லசெரி
பரிஷ் பல்கலைக்கழகம்

கூட்டுறவு இயக்கத்தில் மனிதனே தொடக்கமும் முடிவும். ஆனால் முதலாளித்துவத்திலோ பணமே முதலும் முடிவுமாகும். முதலாளித்துவத்திற்கு மனிதன் வெறும் கருவியே.

இரு அமைப்புக்களினதும் குறிக்கோள்கள் வேறுபட்டவை. முதலாளித்துவ தொழில் முயற்சியில் முதலீடு செய்துள்ள பங்குதாரர் ஆதாயத்தைத்தவிர வேறு எதை அதனிடமிருந்து எதிர்பார்க்க முடியும். ஆனால் கூட்டுறவாளனோ தனது சங்கத்திடமிருந்து நிதி சார்ந்த அனுகூலங்களை மட்டுமல்ல, பண்பு சார்ந்த பல்வகைத் திருப்தியையும் பெறுகின்றான். தொழிலாளி சம்பளத்தைவிட உறுதியான வேலை நிலைமையையும் நட்பு ரீதியான சூழலையும் வேலையினூடாக தன்னை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பினையும் எதிர்பார்க்கின்றான். பாவனையாளன் தரமான பொருள்களையும் வசதிகளையும் எதிர்பார்ப்பதோடு மனித உறவுகளையும் தனது ஆளுமையையும் வெளிப்படுத்த விரும்புகின்றான். விவசாயி தனது குடும்பப் பண்ணையையும், இயற்கையோடு நெருங்கிய தனது வாழ்க்கை முறையையும் பேணிக்காக்க விரும்புகிறான். இந்த எதிர்பார்ப்புகள் யாவும் உயிருள்ள கூட்டுறவு இயக்கத்தில் இடம்பெறுகின்றன, ஏனெனில், அதிகாரம் பணத்திடமல்ல, மக்களிடமே உண்டு. எனவே, கூட்டுறவு இயக்கம் வணிகத்தையும் அதனூடாக பொருளாதாரத் துறையின் ஒரு பகுதியையும் மனிதமயப்படுத்துகின்றது. இது குறித்து கூட்டுறவு இயக்கம் பெருமை கொள்வது நியாயமே.

கூட்டுறவு இயக்கத்தினால் ஏற்படும் இந்த அனுகூலங்கள் அதன் உறுப்பினர்களிடமிருந்து நம்பிக்கை விசுவாசத்தையும், அர்ப்பணிப்பையும், போராடும் உணர்வையும் வெளிக்கொணர்கின்றன. முதலாளித்துவமோ கவர்ச்சிகரமான சம்பளங்களை வழங்குவதன் மூலமே மனிதனுக்குச் செயல் நோக்கம் அளிக்க முனைகின்றது.

ஆனால் மறுபக்கம் ஒன்றும் உண்டு. முதலாவதாக விடயங்கள் சிக்கலாகின்றன. முதலாளித்துவ அமைப்பின் ஆதாயத்தினை திட்டவட்டமாக வரையறுக்கலாம் ஆனால், கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியைக் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் அளவுகோல்களை எண்கணித முறையிலே வெளிப்படுத்துவது எளிதல்ல. மேலும் ஒரு வணிக முயற்சி மனிதமயப்படுத்தபபடும்போது மனித இயல்பின் நல்ல அம்சங்களோடு பாதக அம்சங்களும் தொழிற்படத் தொடங்கியது. இதன் விளைவாக முதலாளித்துவ வணிக முயற்சியைவிட கூட்டுறவு முயற்சி மனித காரணியில் கூடுதலாகத் தங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக நேர்மையின்மை ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் கூடுதலான கேட்டினை விளைவிக்கின்றது ஏனெனில் நம்பிக்கையை உலுக்கி ஆர்வத்தை அது குன்றச் செய்வதனால் வெவ்வேறு ஆளுமைகளுக்கிடையே ஏற்படும் மோதல்களை பணபலத்தைக் கொண்டும் உச்ச ஆதாய நோக்கினைக் கொண்டும் முதலாளிகள் எளிமையாகவும், வேகமாகவும், கொடூரமாகவும் தீர்த்துவைப்பார்கள். ஆனால், இத்தகைய மோதல்கள் கூட்டுறவாளர்களிடையே ஏற்படுமாயின் பாதகமான பல விளைவுகளை ஏற்படுத்தலாம். ஒருமை உணர்வுகூட ஒரு தலைச் சார்பாக திரிபுறலாம். இதன் விளைவாக தகுதியற்றவர்கள் நெறியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதையும், வரம்பு மீறி அவர்கள் பதவியில் நீடிக்கப்படுவதையும் நாம் காண்கிறோம். பழம் பெருமையைப் பற்றிப் பேசி வாழாவிருத்தல் சுயதிருப்தியை அளித்தாலும் எந்தவகையிலும் பலன் அளிக்கமாட்டாது.

கூட்டுறவு முயற்சிகள் மனித ரீதியாகவும், அறவொழுக்க ரீதியாகவும் மேம்பாடுடையவை எனக் கூறுவது சித்தாந்த அடிப்படையிலேயே. ஏனென்றால் செயற்திறமை இன்மையாலோ மனிதத்துவம் இன்மையாலோ இந்தமேம்பாடு நடைமுறையில் நிலைநாட்டப்படாது போய்விடலாம்.

மனித காரணிக்குக் கொடுக்கப்படும் இடம் ஒரு பலமாக அமையவேண்டும் என்பதை எவ்வாறு நாம் உறுதிப்படுத்தலாம்.

முதலாவதாக, வெற்றியீட்ட வேண்டும் என்ற திடசித்தம் வெற்றிக்கு வழிவகுக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று. இத்திடசித்தத்திற்கு வழி கோலுவது கூட்டாக உழைப்பதற்கு உந்தும் உள்நோக்கமேயாகும். இதுவே உறுப்பினர்களின் நம்பிக்கை விசுவாசத்தை நிர்ணயித்து செயற்திறனை நாடுவதற்குத் தலைவர்களை உந்தும்.

கூட்டுறவுச் செயற்பாட்டிற்கு உந்தும் சக்திகள் இருவகைப்பட்டன. முதலாவதாக தனிப்பட்ட பொருளாதார அக்கறை.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# மூன்றும் உலகில் இயற்கை அழிவுகள்-- கூட்டுறவு இயக்கம் எவ்வாறு உதவலாம்

பிறுங் லோன்

மூன்றும் உலகின் விவசாயத் துறையில் இயற்கை அழிவுகள் என்ற ஆவி நடமாடி வருகின்றது.

பொதுப்படையாகக் கூறுவதானால் இயற்கை அழிவுகள் ஆபிரிக்க, ஆசிய லத்தின் அமெரிக்கா போன்றவற்றைச் சார்ந்த பல வளர்முக நாடுகளிலே விவசாயத் துறையில் தன்னிறைவு இன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இதற்குக் காரணம் விவசாயத் துறையே இத்தகைய அழிவுகளால் கூடியளவு பாதிப்புக்கு உள்ளாகின்றமைதான்.

எனவே, இத்தகைய அழிவுகளின் பாதிப்புக்களை ஓரளவு கட்டுப்படுத்தினால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், கிராமப்புற நலனைப் பேணுவதற்கும் ஏதுவாக இருக்கும்; பல மூன்றும் உலக நாடுகளிலே மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றியும், அதோடு தொடர்புள்ள புற வறுமை பற்றியும் உலக நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. எனினும் இவ்விடயத்திலே இயற்கை அழிவுகளின் பங்கினைப் பற்றி போதியளவு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மூன்றும் உலகிலே இயற்கை அழிவுகளால் விவசாயத் துறைக்கு ஏற்படும் பாதிப்புக்களை எவ்வாறு கூட்டுறவு நிறுவன அமைப்பு மூலம் எதிர்கொள்ளலாம் என்பது குறித்து இக்கட்டுரையிலே ஆராய விரும்புகின்றேன்.

## இயற்கை அழிவுகள் -புள்ளி விபரங்கள்

இயற்கை அழிவுகள் என்னும்போது மனிதனின் வாழ்க்கை நிலையைப் பாதிக்கும் சூறாவளி, புயல் பூமி நடுக்கம், வறட்சி, வெள்ளம், எரிமலையின் குமுறல் ஆகியவற்றையே இங்கு குறிக்கின்றோம்.

இத்தகைய அறிவுகளைக் கணக்கெடுப்பதில் ஒத்த தன்மை இல்லாததால் வெவ்வேறு நிறுவனங்களின் பதிவுகளிலே வேறுபாடுகள் தென்படுகின்றன.

அப்படியிருந்த போதிலும் பொதுப்படையாக நோக்குமிடத்து புள்ளி விபரங்களின்படி உலகிலே ஏற்படும் இயற்கை அழிவுகளில் 90 வீதத்திற்கு மேலானவை வளர்முக நாடுகளிலேயே நிகழ்ந்திருக்கின்றன.

1919 – 71 வரையிலான 51 ஆண்டு காலத்திலே 272 அழிவுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் புள்ளி விபரத்தின்படி சராசரி வருடம் தோறும் 5 அழிவுகள் நிகழ்கின்றன. ஆனல் அண்மைக் காலங்களில் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களோடு ஒப்பிடும்போது இந்த சராசரி தொகை குறைவானதாகவே காணப்படுகின்றது.

இந்தப் புள்ளி விபரங்களிலே காணப்படும் இயைபின்மைக்கு ஒரு முக்கிய விளக்கமுண்டு. அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப சாதன வளர்ச்சியின் பயனாக இயற்கை அழிவுகளைப் பதிவு செய்வதில் முன்னேற்றம் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த 51 ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட முக்கிய இயற்கை அழிவுகளாவன: வெள்ளங்கள், பூமி நடுக்கங்கள், சூறாவழி, மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட இயற்கை அழிவுகளில் இவை 90 வீதம்.

அழிவுக்குட்பட்ட பிரதான பிரதேசங்கள் வளர்முக நாடுகளைச் சார்ந்தவையே. புள்ளி விபரங்கள் வருமாறு: ஆசியாவில் 89, லத்தின் அமெரிக்காவில் 49, மத்திய கிழக்கில் 38, ஆபிரிக்காவில் 33.

நிகழ்ந்த அழிவுகளில் 90 வீதமானவை வளர்முக நாடுகளிலேயே ஏற்பட்டுள்ளன எனக் கணிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நீண்ட கால புள்ளி விபரங்களை மேலும் ஆராயும்போது இன்னொரு உண்மையும் புலப்படுகின்றது. பெரும்பாலான அழிவுகள் 1951 – 71 காலப் பகுதியிலேயே நிகழ்ந்துள்ளன. இக்காலப் பகுதியில் மொத்தமாக 282 அழிவுகள் பதியப்பட்டன. பொதுப்படையாகக் கூறுவதானால்1919-71 சராசரி இந்த காலப்பகுதியில் (1951-71) இரட்டிப்பாகின்றது.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது 1951-71 காலப் பகுதியில் ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் இலத்தின் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் உள்ள வளர்முக நாடுகளிலேயே மிகக் கூடுதலான இயற்கை அழிவுகள் நிகழ்ந்தன.

1968-71 காலப் பகுதியில் வறட்சிகள் 8 மடங்காகப் பெருகின, எரிமலைக் குமுறல்கள் மும்மடங்காகப் பெருகின, சூறாவளிகளும், வெள்ளங்களும், நோய்களும் இரண்டு மடங்காகப் பெருகின.

புள்ளி விபரங்களை இவ்வாறு நோக்குமிடத்து வளர்முக நாடுகளிலே இயற்கை அழிவுகளின் நிகழல் பெருகிவரும் போக்கினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

(வளரும்)

# கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையில் வியாபார உறவுகளைப் பலப்படுத்தல்

### கத்தரிக்கப்பட்ட பூக்கள்

கத்தரிககப்பட்ட மலர்களை ஏற்றுமதி செய்வதில் அண்மையில் இதற்கென நிறுவப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாக இயங்கி வந்துள்ளது. இச் சங்கம் சொந்தமாகப் பூக் கன்றுப் பண்ணையொன்றை நடாத்தியது. தரக்கட்டுப்பாடு போன்றவற்றில இது கண்டிப்பாக இருப்பதால் வெளிநாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு ஏற்றுமதி செய்யக்கூடியதாய் இருந்தது.

இப்பொழுது பூ உற்பத்தியில் பெருமபகுதி இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளால் கொள்வனவு செய்யப்படுகின்றது. அமெரிக்கா, பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி, யப்பான், சுவிற்சலாந்து, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளுக்குச சிறு அளவில் கத்தரிக்கப்பட்ட பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன,

உற்பத்தி அதிகரித்து வருவதால் விரைவிலே உள்ளூர் சந்தைத் தேவைக்கு மேலதிகமாக வழங்கீடு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### உத்தேச நடவடிக்கை

எக்சோட்டிக்ஸ் ஒக்கிட்ஸ் கூட்டுறவுச் சங்கம் எனப்படும் சங்கமே கத்தரிக்கப்பட்ட பூத் தொழில்துறைக்கு உச்ச நிறுவனமாய் இருத்தல் வேண்டும். இந்த நிறுவனமே இத்துறையின் சகல அம்சங்களுக்கும் பொறுப்பாய் இருத்தல் வேண்டும். உற்பத்தியாளர் தொகையை அதிகரித்தல், கத்தரிக்கப்பட்ட பூக்களை ஏற்றுமதி செய்தல் ஆகியவை இச் சங்கத்தின் பொறுப்பாய் இருத்தல் வேண்டும.

உள்ளூர் சந்தை வாய்ப்புக்கள் குன்றக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் உள்ளூரிலே கூடுதலான ஆதாயம் உடனடியாகப் பெறக்கூடியதாக இருக்கின்றமையாலும் கூட்டுறவுத் துறையினூடாக ஒழுங்கான வெளிநாட்டுச் சந்தையைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஏற்றுமதிகளைப் பெருக்குவதற்கு உறுதுணையாக இருக்கும் களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், பதனிடு வசதிகள் ஆகியவற்றைச் செப்பம் செய்து பெருப்பித்தல் வேண்டும். ஏனெனில். கத்தரிக்கப்பட்ட பூக்கள் மிகக் குறுகிய காலத்தில் உற்பத்தியாளரிடமிருந்து வாங்குவோர் கைக்கு ஒப்படைத்தல் வேண்டும்;

ஏற்றுமதி வல்லமையை விரிவாகும் பொருட்டு வேண்டிய மூலதனத்தை வங்கிக் கடன்களாகப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

ஏற்றுக்கூலிகளைக் குறைப்பதற்கு விமானச் சேவைகளுடன் பேரம் பேசல் வேண்டும்.

தனியார் துறை இப்பொழுது கத்தரிக்கப்பட்ட பூக்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளதால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உற்பத்தியைப் பலப்படுத்தல் வேண்டும்.

### கைப்பணி

இதுவரையிலும் கைப்பணிப் பொருள்களின் ஏற்றுமதி வாய்ப்புக்கள் செம்மையாகப் பயன் படுத்தப்படவில்லையென்றும், அவற்றிற்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கள் அதிகம் உண்டுஎன்றும் களப்பயிற்சி கருதிற்று.

அகில இலங்கை கைவினைஞர் கூட்டுறவுச் சங்கம் ஏறறுமதி செய்யத்தக்க கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றது. இதில் உறுப்பினர்களாகச்சேர்ந்திருப்பவர்கள் பரம்பரையாக இத்தொழில்களை அடிமட்டத்தில் செய்து வருபவர்களே.

உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் கைப்பணிப் பொருள்களில் பெரும்பாலானவை உல்லாசப பிரயாணிகளால் சங்கத்தின் விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்யப்படுகின்றன. சிறு அளவிலான ஏற்றுமதியையும் சங்கம் மேற்கொண்டுள்ளது.

கைப்பணிப் பொருள்கள் தனிப்பட்டவர்களின் கலை ஆக்கங்களாய் இருப்பதனால் அவை பெருவாரியாக உற்பத்தி செய்ய முடியாதவை. எனவே, விசேட வகைச் சந்தைகள் அவற்றிற்குக் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்.

### உத்தேச நடவடிக்கை

அகில இலங்கை கைவினைஞர் கூட்டுறவுச் சங்கமே கைப்பணித்துறைக்கு உச்ச நிறுவனமாக இருத்தல் வேண்டும். உற்பத்தி தொடக்கம் ஏற்றுமதி வரை அதுவே சகல அம்சங்களுக்கும் பொறுப்பாய் இருத்தல் வேண்டும்.

கைவினைஞர்களுடைய செயற்பாடுகளுக்கிடையே இந்நிறுவனம் இணைப்பை ஏற்படுத்துதல் வேண்டும்;

தேவைப்படும் மூலப்பொருட்கள் கைக் கருவிகள் மாதிரி அமைப்புக்கள், தொழில் நுட்ப ஆலோசனைகள், நவீன தொழில் நுட்ப சாதனங்கள், மேற்பார்வை, தரக்கட்டுப்பாடு விளம்பரம் ஆகிய சேவைகளை இந்நிறுவனம் வழங்குதல் வேண்டும்.

ஆரம்பச் சங்க மட்டத்திலும், உச்ச நிறுவன மட்டத்திலும் முகாமை நுட்பங்களையும் சந்தைப்படுத்தல் நுட்பங்களையும் இந் நிறுவனம் மேற்கொள்ள வேண்டும்.

கடன் வசதிகள் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். அனைத்துலக அடிப்படையில் கூட்டுறவுத்துறையினூடாக இக் கைப்பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஆராயப்பட வேண்டும்.

ஒவ்வொரு பண்டத்தைப் பற்றியும் செய்யப்பட்ட தகவுரைகளைத் தவிர, சில பொதுப்படையான முடிவுகளையும் களப்பயிற்சி எடுத்தது அனவ வருமாறு:

1, குறிப்பிட்ட ஏற்றுமதி இலக்கை எய்துவதற்கு பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களும் கூடிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்,

2. ஏற்றுமதியில் ஈடுபடும் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கிடையே நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தும் பொருட்டு நிரந்தர அடிப்படையில் கலந்தாலோசிப்பதற்கான ஏற்பாட்டினை உருவாக்கவேண்டும். ஏற்றுமதி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம் போன்றவை தூண்டப்படல் வேண்டும்.

நாளாந்தம் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளுக்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய வகையில் கூட்டுறவுச் சட்டங்களும், விதிகளும் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட பண்டங்களின் ஏற்றுமதியில் வெவ்வேறு கூட்டுறவு உச்சநிறுவனங்கள் சிறப்புத் தேர்ச்சி பெறல் வேண்டும். இதற்கு வேண்டிய அமைப்பு மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

ஏற்றுமதியில் ஈடுபடும் சில உச்ச சங்கங்களினதும் இரண்டாம் மட்ட சங்கங்களினதும் வசதிகள் (தொலைபேசி, தகவல், வங்கி) ஒன்று திரட்டப்பட்டு ஒரே இடத்தில் அமைக்கப்படல் வேண்டும்.

கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள் மூலம் (கூடிய சம்பளம், சீரிய சேவை நிபந்தனைகள்) தகுதியான புதிய பணியாளர் வேலைக்கமர்த்தப்படல் வேண்டும். அத்துடன் சகல முகாமைப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்படல் வேண்டும்,

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்திற்கும் அனைத்துலக தொழில் நிறுவனத்திற்கும், இலங்கைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிடையே கூட்டிணைப்பும் ஒத்துழைப்பும் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

(முற்றும்)

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுறவு முயற்சி...

ளைச் சரியாகக் கொடுக்காது, அந்நிறுவனத்திற்குத் தீங்கை விளைவிக்கின்றன. காலம் செல்லும்போது இது மக்களுக்கும தீங்கு விளைவிக்கிறது. தகவல்கள் வெளிப்படுததலும்சிலருக்கு தீமையை அளிககக்கூடும் அரசாங்க, முதலாளித்துவ வர்த்தக முயற்சிகள் இரண்டிலும், தகவல்கள் வெளிவருவதைக் குறைக்கின்றன. இப்பயற்சிகள் கூட்டுறவு முறைக்கு மிகவும் முரண்பாடானவையாகும. இரகசியத் தன்மை யை உருவாக்கும் முறையில் எத்தகையோ தகவல்கள் வெளிப்படுத்தப்படாமலிருக்கின்றன. எல்லாவற்றையும் வெளிப்படுத்தாது இருக்கும் கொள்கையையோ, அல்லது முறையையோ ஒவ்வொரு பல நிறுவனங்களில் காணலாம். மக்கள் ஒருவருடன் ஒருவர் சுதந்திரமாகவும். வெளியாகவும் தமது சிறப்பியல்புகளுக்குப் பொருத்தமாய் முயற்சிகளைச் செய்ய வேண்டுமானால் இவற்றைக் கஷ்டமின்றிச் செய்ய சம்பிரதாயமான அமைப்புகளை மாற்ற வேண்டும். இவ்வகையான அமைப்புகள் முகாமையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அமைப்புகள் மனப்பான்மைகளை மாறச் செய்து, வெளியாகப்பேசக் கூடிய ஒருவருடைய மனப்பான்மையையும் அப்படிச் செய்யாது, இரகசியமாயிருக்கச் செய்யும். தேவைகளுக்கேற்ற அளவில் தகவல்களைப் பரப்பாது, அவற்றைப் பாதுகாக்கும் முறை முகாமையின் சர்வ சாதாரணமாயிருக்கிறது, கீழ் வேலை செய்வோரும், தகவல்களை வைத்திருந்து சரியான நேரத்தில் தமக்குப் பயனளிக்கக்கூடிய முறையில அவற்றைத் தரக்கூடும்.

ஒரு விளக்கம் "ஒரு சிறு தகவல்—யாருடைய முயற்சியோ—" என்பது ஒரு சிலருககு மாத்திரமே வெளியிடப்படும் தகவலாகும். இப்படியிருப்பின், நிறுவனத்திலுள்ள மற்றவர்களுக்கு தாம் பங்கு பற்றாது, உதவி புரியாத ஒரு மன எண்ணம் ஏற்படக்கூடும். எனவே, உள்ளே இருப்போர் சிலர் நினைப்பது போல சிலர் உதவிபுரியாது பங்குபற்றாது இருக்கின்றனர், எனவே, தகவல்களுக்கு ஒரு எல்லை வேண்டுமென்பது ஏற்படக் கூடும். (ஸ்டீல், 1975: 116–120) இங்கே யாருடைய வேலை தகவல் என்பது விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கே சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளர். தகவல்களைப் பெறுவோர். தாம் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும், தமது அபிப்பிராயங்களைக் கூற முடியும் என்றும், அதில் பங்குபற்றுகிறேம் என்றும், உணருகின்றனர் மேலும், இத்தகவல்களைக் கட்டுப்படுத்த முடிந்தோரும், மற்றவர்கள் பங்குபற்றினுல், இதில் உதவியாயிருக்கும் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர் எனவே, அதிகமான தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தை இது உறுதிப் படுத்துகிறது.

ஸ்டீல், (1975; 193–198) ஒரு சிறந்த நிறுவனம் எல்லாமுறைகளும் பின்பற்றப் படும்போது எவ்வாறிருக்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டுகிறுர் அவருடைய குறிப்புகளை இங்கே குறிப்பிட்டு, அதிகமான தகவல்களைக் கூட்டுறவுகளில் வெளியிடுவது பிரச்சினையாயிருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன்,

ஒரு சிறந்த நிறுவனத்திற்கு மிகவும் குறைவான ரகசியங்களே இருக்கும். தகவல்கள் உடனுக்குடன் கிடைக்காவிட்டாலும். ரகசியத் தன்மைக் கொள்கை விதியாக இல்லாமல், விதிவிலக்காயிருக்கிறது. தகவல்கள் ஒரு முறையின் உயிர்நாடி என்றும், ரகசியத்தன்மை இருக்காவிடின் இவை தேவைப்படும் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதே இதன் ஊகமாகும். எல்லாத் தகவல்களும் பிரசுரிக்கப் படுவதில்லை. ஆனுல் அவை வழிகாட்டியாக அமைகின்றன. ஊழியர்கள், பணிப்பாளர்கள், பிரதிநிதிகள் ஆகிய எல்லோரும் இதில் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்முறை, தகவல்களைப் பெறும் முறை ஆகியவற்றை உருவாக்குகின்றது

(வளரும்)

(முற்றொடர்)

# உற்பத்திக்கேற்ற விற்பனை வசதிகள்

இந்தியாவில் கூட்டுறவு அமைப்பு விற்பனை பற்றி இக்கட்டுரை விளக்குகிறது

☀ உள் தேவைகளையும் கிராமப்புற மக்களுடைய தேவைகளையும் நிறைவேற்றுவதற்காக வட்ட அளவிலான பிரதம விற்பனைச் சங்கங்கள் தமது கிராம நுகர்வு நடவடிக்கையை முடுக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

☀ தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டதை அடுத்து (கிராமநுகர்வுநடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதற்காக இத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன) மண்டி/வட்டார அளவிலுள்ள பிரதம விற்பனைச் சங்கங்கள் உள்நாட்டுத் தேவைகளையும் கிராமப்புற மக்களின் நுகர்வுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க இவை முடுக்கிவிடப்படுகின்றன. கொள்கை அளவில் பிரதம விற்பனைச் சங்கங்கள் முதன்மைச் சங்கங்களாகச் செயல்பட்டு வரவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவாகும். ஆனல், நகர்ப்புற நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள் வட்ட அளவில் பிரதம நுகர்வுப் பண்டசாலைகள் மூலம் இயங்கி வருகின்றன. பிரதம விற்பனைச் சங்கங்கள் இல்லறை விற்பனைக் கடைகள் மூலம் மண்டி அல்லது வட்ட நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. கிராமக் கடன் சங்கங்கள் மூலமாக நுகர்வோர் சங்கங்கள் செயல்படுகின்றன. (பிரதம விற்பனைச் சங்கங்களின் தலைமையகங்கள் மண்டி / அல்லது வட்ட நகரங்களிலேயே உள்ளன) எனவே, விற்பனை மற்றும் நுகர்வுச் சங்கங்களை மண்டி/வட்ட அளவில் ஒருங்கிணைப்பது அவசியமானதாகும். அதாவது பிரதம விற்பனை மற்றும் நுகர்வுச் சங்கம் மண்டி அல்லது வட்ட அளவில் இயங்கும்; இவை சில்லறை விற்பனைக் கடைகளை நகரங்களில் நடத்துவது அல்லாமல் கிராமக்கடன் சங்கங்கள் மூலம் விநியோகத்தையும் மேற்கொள்ளலாம்.

## பதனப் பிரிவுகள்

விவசாயப் பதனம் கூட்டுறவுத் துறையில் சமீப காலத்திலேதான் தோன்றியது. இதன் வரவினை நாட்டின் பொருளாதாரத் திட்டத்தின் அறிமுகத்தோடு தொடர்புபடுத்தலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது விவசாய பதனப் பிரிவுகளை ஏற்படுத்தும் முயற்சி ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பிரிவுகள் பருத்தி, நெல், போன்ற சில முக்கிய பொருட்களின் பதனத்துடன் தங்கள் செயலை நிறுத்திக்கொண்டன. இரண்டாவது ஐந்தாண்டு காலத் திட்டத்தின் போது தான் பொருளாதாரவளர்ச்சியில் கூட்டுறவு பதன அமைப்புகளின் பங்கு, குறிப்பாக இவற்றின் முக்கியத்துவம் கூட்டுறவு அமைப்பில் பெரிதும் உணரப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றல் 1960ல் அப்போதிருந்த தேசிய கூட்டுறவு வளர்ச்சி மற்றும் சேமிப்புக் கிடங்குக் கழகம் கூட்டுறவுப் பதனக்குழுவை அமைத்தது. இக்குழு கூட்டுறவுப் பதனம் பற்றிய தனது மேலான பரிந்துரைகளை வழங்கியது. மூன்றாவது திட்ட காலத்தின் போது கூட்டுறவுத் துறையில் பதனப் பிரிவுகளை அமைக்கும் பெரிய இலக்குகளுக்கு மதிப்பு அளிக்கப் பட்டது. என்றாலும் நல்ல இடங்கள் கிட்டாமை, நல்ல இடங்கள் கிடைத்தாலும் அவற்றைப் பெறுவதில் காலதாமதம், குறிப்பிட்ட இயந்திரக் கருவிகள் கிட்டாமை, உரிமங்கள் பெறுவதில் உள்ள இடையூறுகள் ஆகியவை இத்தகைய பதனப் பிரிவுகளை கூட்டுறவு முறையில் அமைப்பதற்குக் குறுக்கீடுகளாய் இருந்தன.

## நவீன மேலாண்மை

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டச் செயற்குழு, இத்தகைய பதனப் பிரிவுகள் அதிக வேலைவாய்ப்பு வசதிகளை அளிக்கக்கூடியனவாக இருப்பதால் அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறிது நடுத்தர மற்றும் பெரிய அளவிலான பதன தொழிற்சாலைகளை (விவசாயம்) அமைப்பதற்கு ஊக்கம் தந்தது. கூட்டுறவுப் பதன சங்கங்கள் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையே உள்ள விலைகளைப் பெருமளவு குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தொடர்பாக சமையல் எண்ணெய் அரிசி, கால் நடைத் தீவனம் முதலிய அவசிய நுகர் பொருட்களின் உற்பத்தியைக் கூட்டுறவு மயமாக்கும் உறுதியான கொள்கையும் கூட்டுறவு இயக்கத்தை அந்தந்தப் பகுதிகளில் பரவலாக்கும் கொள்கையும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டது. மலைவாழ் மக்கள் உள்ள பகுதிகளில் உள்ள கூட்டுறவுப் பதன அமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அவற்றுக்கான தாராள நிதி வசதியை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வழங்கியது. விற்பனை பதன இணையங்கள் முதன்மைச் சங்கங்கள் மற்றும் உற்பத்தியாளர் ஆகியோரது பிரதிநிதித்துவம் கொண்டு நிபுணர் குழாமை அமைப்பது பற்றியும் வலியுறுத்தப்பட்டது விவசாய பதனத்துறையில் நவீன மேலாண்மையின் முக்கியத்துவம், செயற் குழுவினல் வலியுறுத்தப்பட்டது.

ஆருவது திட்ட வரைவில் விவசாய உற்பத்தியை அதிகரித்தல் குறைந்த அளவு உணவுச்சேதம், அதிக வேலை வாய்ப்பு வசதிகள் உயர்ந்த உற்பத்தி விலை ஆகியவற்றை ஏற்படுத்தும் பொருட்டு பதன மற்றும் விற்பனை அமைப்புகளுக்கிடையே உற்பத்தியையும் இணைத்து கூட்டுறவுத் துறையில் விவசாயத் தொழிலை வளப்படுத்த அதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 2340 விவசாயத் தொடர்பு உள்ள பதனப் பிரிவுகள் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 1862 வரையறுக்கப்பட்ட அமைப்புகள்.

## புதுமை

கூட்டுறவுத் துறையிலுள்ள விவசாய பதன அமைப்புகள் கலப்பு நிலையையே அதன் செயற்பாடுகளில் எடுத்துரைக்கின்றது. தற்போது சர்க்கரைக் கூட்டுறவுகளின் செயற்பாடு இவ்வளவு சிறப்பு மிக்கதாக உள்ளது. என்றாலும் சர்க்கரை கட்டுப்பாட்டைத் தளர்த்தியது துவக்கப்படவிருக்கும் பல சர்க்கரை கூட்டுறவுகளின் செயற்பாட்டிற்கு ஊறுவிளைப்பதாக உள்ளது. அரிசி ஆலைகளில் அதன் திறனுக்கேற்ற பணி கிடைப்ப லலை. இது அவற்றிற்கு ஒரு பிரச்சினையே. 1974 முதல் கூட்டுறவு அரிசி ஆலைகள் நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன அரிசி ஆலைகளின் திறன் முந்தைய ஆண்டுகளில் மிகவும் குறைவாக இருந்தன. ஏறக்குறைய 40 சதவீத அளவுக்கே அவை இயங்கின. இந்த குறைவுற்ற நிலை மாநில அரசுகளின் இந்திய உணவுக் கழகம் ஆகியவை கொண்டு வந்த பல தரப்பட்ட கொள்கைகளின்—லெவி, கொள் முதல் முதலியன—காரணமே. தீவிர முயற்சிகளின் பேரில் 1974 முதல் எல்லா கூட்டுறவு அரிசி ஆலைகளும் நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன. தற்போது இவற்றின் திறன் மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது

## அரசினரின் முரண்பட்ட கொள்கை

கூட்டுறவு விற்பனை இயக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் மற்றொரு காரணம் அரசின் இடை இடையே அதிகரித்து வரும் முரண்பட்ட கொள்கைகளாகும். தேசிய மட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த வேண்டுமென தீர்மானித்துவிட்டு செயல் முறைகளில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட விபனை மன்றங்கள் என்ற பெயரில் கூட்டுறவு விற்பனைச் சங்க வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் கொள்கை எப்படி உருவாக்கப்பட்டதோ தெரியவில்லை. இத்தகைய முரண்பட்ட கொள்கைகளால் கூட்டுறவுக் கடன் துறைக்கும், விற்பனைத் துறைக்கும் இணைப்பு செயல் வடிவம் கொடுக்க முடியாமற் போவதை அரசினரின் கவனத்திற்கு இது வரை எடுத்துச் செல்லவில்லை போலும்.

மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இதுகாறும் இடைத்தரகர்களின் பணியையும் சந்தை விலையை அனுசரித்து விளை பொருட்களை விற்றுத் தரும் பணிகளை மட்டும் ஆற்றிக் கொண்டிருந்தால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கமாத எப்போது பணியாற்றுவது? நமது நாட்டின் உழவர்களின் உற்ற நண்பனாக இருந்து விற்பனை—ஆலோசனை சொல்வதோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு விளைபொருளுக்கும் நியாயமான ஊக்குவிக்கக் கூடிய விலை உத்தர வாதம் முன் கூட்டியே அறிவிக்கும் நிலை உருவாக்கப்பட்டால்தான் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மீது உழவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

(முற்றும்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு இயக்கத்தின்...

கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரை இது வருமானத் தொகையையும், செலவினங்களின் அளவையும் பொறுத்தது. அத்துடன் ஆதாயத்திற்காக நடாத்தப்படும் தொழில் முயற்சிகள் மேற்கொள்ளும் சுரண்டலையும் இது பொறுத்திருக்கின்றது. இது எதுவாயினும் இத்தகைய உள் நோக்கம் ஒப்பீட்டு அடிப்படையில் பலவீனமானதே. ஏனெனில் ஆதாயம் பல பேருக்கிடையே பங்கிடப்பட வேண்டியிருப்பதால் அதன் ஊக்குவிப்புத் தன்மை குன்றியதாகவே காணப்படுகின்றது. ஆனல் ஒரு முதலாளித்துவ நிறுவனத்திலேயோ ஆதாயத்தின் பெரும் பகுதி ஒரு சிலருக்கே கணிசமான தொகைகளில் செல்வதால் அது பலம் பொருந்திய உந்து சக்தியாக விளங்குகிறது.

பொருளாதார ஊக்குவிப்பைவிட மேம்பட்ட உந்து சக்தியொன்றும் உண்டு. இதற்கு ஏற்ப மனிதன் தனது ஆளுமையை விரிவாக்க விரும்புகின்றான். தனது சுவட்டைப் பதித்துச் செல்லும் வகையில் ஏதாவது ஒன்றைப் படைக்க விரும்புகின்றான். தனது வாழ்க்கைக்கு ஆழ்ந்த அர்த்தம் கொடுக்க வல்ல ஆக்கபூர்வமான வேலைக்குத் தன்னை அர்ப்பணிக்க விரும்புகின்றான். அவனிடம் பொதிந்துள்ள அறவொழுக்க உணர்வு மனித நிலைமைகளை மதிப்பீடு செய்யவும், அவற்றையும், அவற்றுடன் தொடர்புள்ள சமூக அமைப்புக்களையும் பேணவோ மாற்றியமைக்கவோ உந்துகின்றது. இவற்றையெல்லாம் செம்மையாகச் செய்வதென்றல் இவற்றை உருவாக்க ஏதக்களாக இருந்த காரணங்களை ஆழ்ந்து ஆராய்ந்து இனங்கண்டு கொள்ள வேண்டும். இத்தகைய உந்துதல் அல்லது உள்நோக்கத்தை 'உயரிய' உள்நோக்கம் எனலாம்.

இத்தகைய உயரிய உள்நோக்கம் கூட்டுறவு இயக்கம் எங்கணும் காணக்கூடியதாக உள்ளது எனச் சொல்வதற்கில்லை. ஆனல் குறிப்பாக வழிகாட்டி அல்லது சித்தாந்த நிறுவனங்களில் வலுப்பெற்றிருப்பதோடு கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் தீர்க்கமான பங்கினையும் வகித்துள்ளது என்பது உண்மையே. வெறுமனே பொருளியல் உந்துதலால் மட்டும் இத்தகைய பங்களிப்பு உருவாகியிருக்க முடியாது சமுதாய மனச்சாட்சியின் பெயரில் சமூக அநீதிக்கு எதிராக கிளர்ந்தெழுதல் என்ற அடித்தளத்திலேயே இந்த உயரிய உள்நோக்கம் வளர்ச்சி பெற்றுள்ளது.

எனவே, இந்த உயரிய உந்துதல் சக்தியை தடைப்பண்ணுமல் இருப்பது மட்டுமல்ல; அதற்கு உரமிட்டு வலுப்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும் அத்துடன் அவ்வுணர்விற்கு வளமூட்டும் சமுதாய மனச்சாட்சியையும் நாம் விருத்தி செய்தால் அவசியம் — ஏனெனில் பொருளாதார உந்துசக்தி இப்பொழுது குறிப்பாக வலுக்குன்றியிருப்பதால்.

(வளரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஜனநாயக நிருவாகத்தின்...

உறுப்பினர்கள், ஜனநாயக அடிப்படையில் வாக்குரிமையையும், அவர்களுடைய சங்கங்கள் மேற்கொள்ளும் முடிவில் பங்கேற்கும் உரிமையையும் அனுபவிக்கிறார்கள்.

ஆரம்பச் சங்கங்களில் அதாவது தனிநபர்கள் உறுப்பினர்களாக உள்ள சங்கங்களில், உறுப்பினர்கள் பொதுவான பொருளாதாரத் தேவையுடையவர்கள் என்ற அடிப்படையில் சேருகிறார்களே அன்றி முதலீடு செய்பவர்களாக அல்ல. கல்வேர்ட் கூறுவது போல ஒரு பொதுவான தேவை ஓர் அமைப்பை ஏற்படுத்துவதால் அத்தேவை, சங்கத்தில் ஒவ்வோர் உறுப்பினரின் நிலையையும் முடிவு செய்யவேண்டும். அனைவரும் ஒரே தேவையுடையவர்களாக இருப்பதால் அனைவரும் சமம். அதனால் ரொச்டேல் (Rochdale) முன்னோடிகளால் 'ஒருவர்க்கு ஒரு வாக்கு' என்ற விதி கடைப்பிடிக்கப்பட்டது. ஆரம்பச் சங்கங்களின் பேரவையில் வாக்களிப்பதற்கு இதுவே மாற்ற முடியாத விதியாகும். எனவே சங்கத்தின் உறுப்பினர்களின் சமுதாயத் தொடர்புகளைப் பொறுத்தவரை, அவர்கள் சமத்துவத்தின் அடிப்படையில் சேருகிறார்கள் என்பது அடிப்படை விதியாகும். இதிலிருந்து பெரும்பான்மையினரின் விருப்பம் நிலைக்கும் என்பது தெளிவாகிறது. அதாவது சங்கம் அதன் உறுப்பினர்களின் ஜனநாயக நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும் எனவே, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஒரு ஜனநாயக நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும். எனவே ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் ஒரு ஜனநாயக அமைப்பாகும்.

கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக இயந்திரங்கள் ஜனநாயகக் கொள்கையுடையனவாக இருக்கவேண்டுமானால் அவற்றின் வளர்ச்சி, கூட்டுறவு இயக்கம் அதன் தொடக்ககாலத்திலிருந்தே ஏற்றுக்கொண்ட அடிப்படை விதிகள், கொள்கைகள் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கவேண்டும். அனைத்துலகக் கூட்டுறவுக் கழகக் கொள்கைக் குழு 'கூட்டுறவுச் சங்கம் மனிதர்கள் சேர்ந்த அமைப்பாக இருப்பதால் உறுப்பினர்களின் நிலை சமமானதாக இருக்க வேண்டும்; அவர்கள் சங்கத்தின் கொள்கைகள் பற்றிக் கருத்துக் கூறவும், முடிவெடுப்பதில் பங்கேற்கவும் சமவாய்ப்பு உடையவர்களாக இருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரே ஒரு வாக்கு மட்டும் கொடுப்பதைத்தவிர வேறு வழி இல்லை, மேலும் கூட்டுறவு இயக்கம் நவீன பொருளாதார வாழ்க்கையி[ல்] தொழில் நுட்ப முறையை பொதுமக்களின் கட்டுப்பாட்டில் வைப்பதற்காக இருப்பதால், அது தனிநபர், தன் கருத்தைக் கூறவும் அவருடைய சங்க நடவடிக்கைகளிலும், முடிவுகளிலும், அவரது குரலை எழுப்பவும் அவரது கருத்தைச் செயல்படுத்தவும் ஒரு வாய்ப்பளிக்கவேண்டும். தனிமனிதன் பெரும்பாலும் இத்தொழில் நுட்ப முறையில் ஒரு பல்சக்கரத்தின் நிலைக்குத் தாழ்த்தப்படுகிறான். சங்கத்தின் நடவடிக்கைகளில் அவருடைய குரல் மற்ற ஒவ்வோர் உறுப்பினருடைய குரலுக்கும் சமமாக இல்லாவிட்டால் சங்கத்தின் நல்ல நிர்வாகத்திற்கு அவருடைய பொறுப்புணர்ச்சி உண்மையானதாக இராது. அதற்கிணங்க ஆரம்பச் சங்கங்களில் ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்ற விதிக்கு எவ்வித விலக்கும் இருத்தல் கூடாது.

ஆரம்பச் சங்கங்கள் நீங்கலான மற்ற சங்கங்களில்—(மத்திய) இணைப்புச் சங்கங்களில் அதாவது ஆரம்பச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ள சங்கங்களிலும், (இணைப்புச் சங்கங்கள் சேர்ந்து அமைத்த மாநில சங்கங்களிலும்) நிர்வாகம் ஜனநாயக அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அமைப்பு மூலம் நடத்தப்பட வேண்டும், அனைத்துலகக் கூட்டுறவுக் கழகக் கொள்கைக் குழு விளக்குவது போல் இரண்டாவது (மத்திய) மூன்றாவது (மாநில) நிலை அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவின் மூலம் தோற்றுவிக்கப்பட்டவை. அவையும் கூட்டுறவு அமைப்புகளே, ஆரம்பக் கூட்டுறவுகள் முக்கியமான கூட்டுறவு விதிகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவை போல இவையும் விதிகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவையாகும். இணைப்பு அமைப்புகளின் உறுப்பினர்கள் சம உரிமையுடையவர்கள். இச்சமத்துவம் ஜனநாயக நிர்வாகத்திற்கான அடிப்படையை அவர்களுக்கு அளிக்கிறது, எனவே; இணைப்புச் சங்கங்களிலும் 'ஓர் உறுப்பினருக்கு ஒரு வாக்கு' என்ற விதியைச் செயல்படுத்துவது நியாயமானதாகும். இணைக்கப்பட்ட சங்கங்களின் அளவில் பெரிதும் வேறுபாடில்லாமல் இருந்தால்தான் இம்முறை திருப்திகரமாகச் செயல்படும்.

## குழந்தைகள் நலனுக்கான தொடர் நடவடிக்கைகள்

சென்ற ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கங்கள் குழந்தைகளுக்குப் பயனளிக்க கூடியவகையில் திட்டங்களை வகுத்து நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டுமென ஐ. நா. பொதுச் சபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றினை அண்மையில் நிறைவேற்றியது.

தேசிய சமூக பொருளாதார அபிவிருத்திக்காகத் திட்டங்களை வகுக்கும் போது தாய்-சேய் உடல் நலத்திட்டங்களும் அவற்றுடன் இணைக்கப்பட வேண்டுமென்றும் குழந்தைகளின் உடல் நலம் கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு திட்டவட்டமான தேசிய இலக்குகள் வரையறுக்கப்படல் வேண்டும் என்றும் இத்தீர்மானம் அரசாங்கங்களைக் கோருகின்றது.

## விவசாயவங்கித் துறைப்பயிற்சி நிலையம்

விவசாய வங்கித் துறையில் பயிற்சியளிப்பதற்கான நிலையம் ஒன்றினை இந்தியாவிலே (பூனே) நிறுவுவதற்கு ஐ நா. சபையின் உணவு விவசாய நிறுவனம் 1 லட்சம் டாலர்களை நிதியுதவியாக வழங்கவிருக்கின்றது.

## கூட்டுறவுக் கல்வித் திட்டங்கள் மதிப்பீடு

நேபாளத்தின் கூட்டுறவு கல்வி திட்டங்களை மதிப்பிடும் பொருட்டு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் பிரதேச அலுவலக இணைப்பு நெறியாளர் கலாநிதி தர்மவீர அண்மையில் அங்கு சென்றார்.

## ப. நோ. கூ. சங்க உபவிதிகள்

ப, நோ, கூ. ச. உபவிதிகளை புதிய திருத்தங்களுடன் அச்சிடுவதற்கான முயற்சிகளை யாழ்மாவட்டக் குழு மேற்கொண்டு வருகிறது. இதுவரை உபவிதிகள் கிடைக்காது கஷ்டப்பட்டோர் விரைவில் அவற்றை வாங்க ஒழுங்கு செய்யப்படும்.


மில்க்வைற் அப்பியாசக்கொப்பி




மாணவ மணிகளே!

50 மில்க்வைற் நீலசோப் அல்லது
5 மில்க்வைற் பார்சோப் அல்லது
5 மில்க்வைற் சலவைப்
பவுடர் பெட்டி
லேபிள்களை அனுப்பி
மில்க்வைற் அப்பியாசக் கொப்பியையும்
நேரசூசியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

''மில்க்வைற்'' யாழ்ப்பாணம்


## வேகமான முன்னேற்றம்

இந்தியக் கூட்டுறவு இயக்கம் சகல துறைகளிலும் வேகமாக முன்னேறியுள்ளதென இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு. வி. எஸ். விஸ்வநாதன் பத்திரிகையாளர் மகா நாட்டில் பேசும்போது கூறினார்.

இதற்குச் சான்றாக அவர் கொடுத்த புள்ளி விபரங்கள் வருமாறு:

இப்பொழுது கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் மொத்த தொகை 9 2 கோடி. ஓர் ஆண்டிற்கு முன்னர் உறுப்பினர் தொகை எட்டுக் கோடியாக இருந்தது.

நாட்டிலேயுள்ள ஏறக்குறைய 87 வீத கிராமங்களில் கூட்டுறவு இயக்கம் பரவியிருக்கின்றது.

மாவட்ட கூட்டுறவு வங்கிகளினதும் மத்திய கூட்டுறவு வங்கிகளினதும் வைப்புப் பணம் அதிகரித்துள்ளன. இவற்றினூடாக வழங்கப்பட்ட கடன்களின் தொகையும் அதிகரித்துள்ளது.

பொது விநியோகத் திட்டம் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதன் பயனாக பாவனையாளர் சங்கங்களின் விற்பனைப் பிரட்டு அதிகரித்துள்ளது. தேசிய பாவனையாளர். கூட்டுறவுச் சம்மேளனத்தின் விற்பனைப் பிரட்டு இவ்வாண்டு ரூ 150 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சென்ற ஆண்டு விற்பனைப் பிரட்டுத் தொகை ரூ 120 கோடியாக இருந்தது.

உர உற்பத்தித்துறையில் கூட்டுறவு இயக்கம் மேலும் இரு உற்பத்தி நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. கூட்டுறவுச் சீனி ஆலைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை உத்தேச தேசிய கனரக பொருளியல் கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்த ஆண்டில் உற்பத்தி செய்ய இருக்கின்றன என்றும் திரு. விஸ்வநாத் குறிப்பிட்டார்.

யா. ப. நோ. கூ. ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 341-79
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No. QB/8965/78